சென்னை செம்மொழி பூங்காவில் மலர் கண்காட்சி

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்

சென்னை, பிப்.10: சென்னை செம்மொழி பூங்காவில் மலர் கண்காட்சி இன்று தொடங்கி ஒரு வாரம் நடைபெறுகிறது. மலர் கண்காட்சியை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று காலை தொடங்கி வைக்கிறார்.

குளிர் பிரதேசங்களில் நடத்தப்படும் மலர் கண்காட்சியை சென்னையில் நடத்தினால் எப்படி இருக்கும் என்ற சென்னை மக்களின் ஏக்கத்தை போக்கும் வகையில் தமிழ்நாடு தோட்டக்கலைத்துறை சார்பில் சென்னை செம்மொழி பூங்காவில் மலர் கண்காட்சி நடத்தப்பட உள்ளது.

கடந்த ஆண்டு, ஜூன் மாதம் மலர் கண்காட்சி நடத்தப்பட்டது. இதற்கு பெருமளவில் வரவேற்பு கிடைத்தது. இந்நிலையில், சென்னை செம்மொழி பூங்காவில் மலர் கண்காட்சி இன்று தொடங்கப்படுகிறது. இந்த மலர் கண்காட்சியை, அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். விழாவுக்கு, அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மேயர் பிரியா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சட்டமன்ற உறுப்பினர் எழிலன், துணை மேயர் எம்.மகேஷ்குமார், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குனர் குமாரவேல் பாண்டியன், வேளாண்மை உற்பத்தி ஆணையர் ஆபூர்வா உட்பட பலர் கலந்து கொள்கின்றனர்.

கிருஷ்ணகிரி, கொடைக்கானல், குமரி, மதுரையில் இருந்து அரிய வகை மலர்கள் எடுத்துவரப்பட்டு கண்காட்சியில் பயன்படுத்தப்பட உள்ளது. 10 லட்சம் மலர்கள் இந்த கண்காட்சியில் பயன்படுத்தப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது.

▶ சென்னை செம்மொழி பூங்காவில் மலர் கண்காட்சி இன்று தொடங்கி ஒரு வாரம் நடைபெறுகிறது. கண்காட்சியில் இடம்பெற்றுள்ள அழகிய அன்னப்பறவை வடிவிலான மலர் செடிகள்.

தமிழை வழக்காடு மொழியாக அறிவிக்க வலியுறுத்தி

தொடர் உண்ணாவிரத போராட்டம் நடத்த அனுமதி

சென்னை, பிப். 10: தமிழை வழக்காடு மொழியாக அறிவிக்க வலியுறுத்தி, வரும் 28ம் தேதி முதல் தொடர் உண்ணாவிரதம் இருக்க அனுமதி வழங்கும்படி காவல்துறைக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மதுரையை சேர்ந்த வழக்கறிஞர் பகவத் சிங் என்பவர், சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக அறிவிக்கவலியுறுத்தி சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அல்லது மெரினாவில் திருவள்ளுவர் சிலை அருகே டிசம்பர் 20ம் தேதி முதல் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க திட்டமிட்டுள்ளோம். அதற்கு அனுமதி வழங்க காவல்துறை மறுத்துள்ளது. எனவே, உண்ணாவிரதம் இருக்க அனுமதி வழங்குமாறு காவல்துறைக்கு உத்தரவிட வேண்டும் என்று கோரியிருந்தார்.

காவல்துறைக்கு ஐகோர்ட் உத்தரவு

கடந்த முறை இந்த மனு விசாரணைக்கு வந்தபோது, சாகும்வரை உண்ணாவிரத போராட்டத்திற்கு அனுமதி அளிக்க முடியாது. மனுதாரர் கேட்கும் இடங்களில் அனுமதிக்க முடியாது என்று காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதைக்கேட்ட நீதிமன்றம், வேறு எந்த மாதிரியான போராட்டத்திற்கு எந்த இடத்தில் அனுமதிக்கப்படும் என்று காவல்துறை விளக்கம் அளிக்குமாறு உத்தரவிட்டது.

இந்த வழக்கு நீதிபதி என்.ஆனந்த் வெங்கடேஷ் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, சட்டம் -ஒழுங்கு மற்றும் போக்குவரத்து பிரச்னைகளை கருத்தில் கொண்டே அனுமதி மறுத்ததாகவும், சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகே பிப்ரவரி 27ம் தேதி முதல் தொடர் உண்ணாவிரதம் இருக்க அனுமதிக்கலாம் என்று காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அதற்கு, மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், விருப்பமுள்ளவர்கள் குறிப்பிட்ட எண்ணிக்கையிலேயே கலந்துகொள்ள இருப்பதால் சட்டம்-ஒழுங்கு பிரச்னை எதுவும் ஏற்படாது என்று உறுதி அளிக்கப்பட்டது.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, மனுதாரர் கேட்பதில் எந்த சட்டவிரோதமும் இல்லை என்பதால், வழக்கமான நிபந்தனைகளுடன் உண்ணாவிரத போராட்டத்திற்கு பிப்ரவரி 28 முதல் அனுமதி வழங்கவேண்டும் என்று காவல்துறைக்கு உத்தரவிட்டு விசாரணையை மார்ச் 6ம் தேதிக்கு தள்ளி வைத்தார்.

2 கட்டுமான நிறுவன அதிபர்களுக்கு

சொந்தமான 10 இடங்களில் அமலாக்கத்துறை சோதனை

சென்னை, பிப்.10: இரண்டு கட்டுமான நிறுவனத்திற்கு சொந்தமான 10 இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் நேற்று சோதனை நடத்தினர்.

சென்னை பெரம்பூர் பேரக்ஸ் சாலையில் பின்னி மில் அமைந்துள்ள இடத்தில் பிரமாண்ட குடியிருப்பு கட்ட தி.நகரை சேர்ந்த லேண்ட் மார்க் ஹவுசிங் பிராஜெக்ட்ஸ் லிமிடெட் மற்றும் கே.எல்.பி. பிராஜெக்ட் பிரைவேட் லிமிடெட் ஆகிய 2 கட்டுமான நிறுவனம் குடியிருப்பு கட்டியுள்ளது. பின்னி மில் இடத்தை வாங்கியதில் ரூ.120 கோடி கணக்கில் கட்டாமல் ரொக்கமாக வழங்கப்பட்டது குறித்து வருமான வரித்துறை சோதனை நடத்தினர். இந்த சோதனையில் தான் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரசு அதிகாரிகளுக்கு ரூ.50 கோடி லஞ்சம் கொடுத்தது தெரியவந்தது.

இந்த மோசடி குறித்து லஞ்ச ஒழிப்புத்துறை விசாரணை நடத்தியது. இதை தொடர்ந்து சட்டவிரோத பணம் பரிமாற்றம் சட்டத்தின் கீழ் அமலாக்கத்துறை தனியாக ரூ.50 கோடி லஞ்சம் வழங்கியது தொடர்பாக வழக்குப் பதிவு செய்துள்ளது. அதைதொடர்ந்து பின்னி மில் பகுதியில் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிய சென்னை தி.நகர் 27வது தெருவில் உள்ள லேண்ட் மார்க் ஹவுசிங் பிராஜெக்ட்ஸ் லிமிடெட் நிறுவனம் மற்றும் அதன் மேலான் இயக்குநர் உதயகுமாரின் வீடு, அதேபோல், புளியந்தோப்பு படாளம் ஸ்ட்ராஹன்ஸ் சாலையில் அமைந்துள்ள கே.எல்.பி. பிராஜெக்ட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் இயக்குநர்கள் சுனில் கேட்பாரியா, மனீஷ் பார்மர் ஆகியோர் அலுவலகம் மற்றும் வீடுகள், எம்ஜிஎம் கோல்டு மதுபான உரிமையாளர் அரவிந்த் வீடு, சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள ஆடிட்டர் கணபதி வீடு என மொத்தம் 10 இடங்களில் ஒன்றிய தொழில் பாதுகாப்பு படை வீரர்கள் உதவியுடன் நேற்று அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

இந்த சோதனையில் முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாக கூறப்படுகிறது. இதிலா அதிமுக முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் எம்பிக்கள் பலர் சிக்கியுள்ளதாக கூறப்படுகிறது.

கொடநாட்டில் கொலை நடந்த இடத்தில்

நீதிமன்ற அதிகாரிகள் ஆய்வு செய்ய வேண்டும்

புதிய மனு தாக்கல்

ஊட்டி, பிப். 10: நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகே கொடநாடு பகுதியில் ஜெயலலிதா மற்றும் சசிகலாவுக்கு சொந்தமான பங்களாவில் கொலை மற்றும் கொள்ளை சம்பவம் கடந்த 2017ம் ஆண்டு நடைபெற்றது. இதுதொடர்பாக சோலூர்மட்டம் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

இதில், முக்கிய குற்றவாளியான கனகராஜ் சாலை விபத்தில் உயிரிழந்தார். இந்த கொலை மற்றும் கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்ட சயான், வாளையார் மனோஜ் உட்பட கேரளாவை சேர்ந்த 10 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த வழக்கை தற்போது சிபிசிஐடி போலீசார் மீண்டும் குற்றவாளிகளிடம் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், ஊட்டியில் உள்ள மாவட்ட நீதிமன்றத்தில் இவ்வழக்கு நேற்று விசாரணை வந்தது. வாளையார் மனோஜ் மட்டும் ஆஜராகி இருந்தார்.

அப்போது அரசு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், 'குற்றவாளிகளின் செல்போன் உரையாடல் தொடர்பான தொலைதொடர்புத்துறை விசாரணை அறிக்கை இன்னும் வந்து சேரவில்லை. தொடர்ந்து விசாரணை நடத்திவருகிறோம்,' என்று தெரிவித்தனர்.

எதிர்தரப்பு வக்கீல் விஜயன், ''கொடநாடு பகுதியில் கொலை நடந்த இடத்தில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளது. எனவே, கொடநாடு கொலை வழக்கில் சம்பவ இடத்தில் நீதிமன்ற அதிகாரிகள் பார்வையிட்டு ஆய்வு செய்ய வேண்டும்'' என்ற மனுவை தாக்கல் செய்தார்.

இதையடுத்து அரசு தரப்பு பதில் மனு தாக்கல் செய்வதற்காக வழக்கு விசாரணையை வரும் 23ம் தேதிக்கு ஒத்திவைத்து நீதிபதி அப்துல் காதர் உத்தரவிட்டார்.

ஒன்றிய அரசை கண்டித்து 11ம் தேதி திமுக ஆர்ப்பாட்டம்

சென்னை, பிப். 10: தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையின் அட்டூழியத்தை வேடிக்கைபார்க்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து நாளை (11ம் தேதி) காலை 10.30 மணிக்கு ராமேஸ்வரத்தில், திமுக மீனவரணி செயலாளர் ஜோசப் ஸ்டாலின் ஒருங்கிணைப்பில், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. மீனவர் சங்கங்களை அந்தந்த மாவட்டச் செயலாளர்கள் திரட்டி ஆர்ப்பாட்டத்தை பெரும் வெற்றியடையச் செய்ய வேண்டும் என திமுக தலைமை நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

TAMIL NADU CEMENTS CORPORATION LIMITED
(A GOVERNMENT OF TAMIL NADU UNDERTAKING)
5th Floor, Aavin Illam, No.3A, Pasumpon Muthuramalingam Salai, Nandanam, Chennai-600 035.
e-TENDER NOTICE

e.Tender Ref.Nos	Name of the Works	Est.value in Rs.	EMD in Rs.	Due Date
94/2023-24	Appointment of transport contractors for movement of packed cement from Ariyalur Cement Works, Ariyalur District T.N. to various destinations in Tamil Nadu, Puducherry and Kerala	1.19 Crore	50,000	26.02.2024
95/2023-24	Appointment of transport contractors for movement of packed cement from Alangulam Cement Works, Alangulam, Virudhunagar District T.N. to various destinations in Tamil Nadu and Kerala	61.00 lakhs	50,000	26.02.2024

Important Note : A Pre-bid meeting for e.T.No.95/2023-24 will be held on **14.02.2024 at 4.00** P.M. The Tender document can be downloaded from **https://tntenders.gov.in.** Corrigendum /Addendum to this publication, if any would appear only on the above said website.
DIPR/827/TENDER/2024
GENERAL MANAGER (MARKETING)

தமிழ் நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம்,
(அரசு சார்பு நிறுவனம்)
132, ஈ.வெ.ரா. சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை-10.
குறுகிய - மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்.48/2023/24 நாள் : 09.02.2024

வ. எண்.	பணியின் பெயர் மற்றும் இடம்	தோ.மதிப்பு ரூபாய் இலட்சத்தில்	வி.காலம்	ஒ.தி.நாள்
1.	சென்னை மாநகரம், பூந்தமல்லியில் உள்ள 1 ஆய்வாளர், 2 உதவி ஆய்வாளர்கள் மற்றும் 42 காவலர் / தலைமை காவலர் குடியிருப்புகளுக்கு சிறப்பு மராமத்துப்பணிகள் மேற்கொள்ளுதல். (மே.பொ/செ.வ/வ.பி./237-A/2024)	85.37 + GST @ 18%	14.02.2024 to 19.02.2024	21.02.2024
2.	சென்னை மாநகரம், பட்டாபிராமில் தற்போதுள்ள 3 ஆய்வாளர்கள், 6 உதவி ஆய்வாளர்கள் மற்றும் 86 காவலர் / தலைமை காவலர் குடியிருப்புகளுக்கு சிறப்பு மராமத்துப்பணிகள் மேற்கொள்ளுதல். (மே.பொ/செ.வ/வ.பி./237/2024)	70.32 + GST @ 18%	14.02.2024 to 19.02.2024	21.02.2024

மேலும் ஒப்பந்தப்புள்ளி விவரங்களுக்கு http://tntenders.gov.in மற்றும் www.tnphc.com பார்க்கவும்
செ.ம.தொ.இ./ 837 /ஒப்பந்தப்புள்ளி/2024
கண்காணிப்பு பொறியாளர்/சென்னை வட்டம், த.கா.வீ.வ.க., சென்னை.

கொடைக்கானல் நகராட்சி
இணையவழி ஒப்பந்தப்புள்ளி அழைப்பு
15–வது நிதிக்குழு பரிந்துரை 2023–24
Two Cover System
(ந.க.எண். 128/2024/இ1 நாள். 08.02.2024)

1. 15–வது நிதிக்குழு பரிந்துரை 2023–24 ன் கீழ் பணிகள் மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.
2. பணியின் மதிப்பு ரூ. 94.00 இலட்சம் ஆகும்.
3. ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமான விபரங்களை www.tntenders.gov.in இணையதள முகவரியில் பார்வையிடலாம்.
4. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை www.tntenders.gov.in இணையதள முகவரியில் 14.02.2024 முதல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
5. ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : 23.02.2024 அன்று மாலை 3.00 மணி வரையில்
6. ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 23.02.2024 அன்று மாலை 3.30 மணி
7. ஒவ்வொரு பணியின் மதிப்பீட்டு தொகை மற்றும் டேவணித் தொகை, ஒப்பந்ததாருக்கான தகுதி உள்ளிட்ட விபரங்களை ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தின் மூலம் அறியவும்.

செ.ம.தொ.இ.818/ஒப்பந்தப்புள்ளி/2024
ஆணையாளர், கொடைக்கானல் நகராட்சி

தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஈரோடு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண். 296/2022/அ10 நாள்: 07.02.2024
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
பவானிசாகர் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம் - வடிகால் அமைத்தல்

1. முழுமையான விபரங்களுக்கு www.tntenders.gov.in இணையதள முகவரியினைப் பார்வையிடவும்.
2. ஈரோடு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் (மு.கூ.பொ) அவர்களால் ஈரோடு மாவட்டம் **பவானிசாகர் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் உள்ள தெருக்களுக்கு கிடைமட்ட கழிவு நீர் வடிப்பானுடன் கூடிய கான்கிரீட் வடிகால் அமைத்தல்** பணிக்கு மின்ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது. (இரண்டு உறை முறை)
3. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் இலவசமாக 08.02.2024 முதல் 23.02.2024 வரையிலான காலத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. பொதுவான நேரம் மற்றும் நாள்:
   (i) மின் ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்ய மற்றும் பதிவேற்றம் செய்திட கடைசி நாள் மற்றும் நேரம் 23.02.2024, பி.ப. 3.00 மணி வரை
   (ii) மின் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 23.02.2024, பி.ப. 4.00 மணி.

செ.ம.தொ.இ.807/ஒப்பந்தப்புள்ளி/2024
திட்ட இயக்குநர் (மு.கூ.பொ), மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஈரோடு மாவட்டம்.

3 மாதங்களுக்கு முன் மாயமான

பெரம்பலூர் ஆசிரியை கொலை?

சென்னையில் சிக்கிய ஆசிரியர் திடுக்கிடும் தகவல்

சென்னை, பிப். 10: பெரம்பலூர் அருகே ஆசிரியை மாயமான வழக்கில் தனிப்படை போலீசாரால் தேடப்பட்ட ஆசிரியர் சென்னையில் சிக்கினார். விடிய விடிய நடந்த விசாரணையில் ஆசிரியையை கொலை செய்து எரித்து விட்டதாக பகீர் தகவலை போலீசாரிடம் தெரிவித்துள்ளார்.

பெரம்பலூர் அருகே உள்ள குரும்பலூர் மாரியம்மன் கோயில் தெருவை சேர்ந்தவர் வெங்கடேசன் (44). வேப்பந்தட்டை தாலுகா வி.களத்தூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் அறிவியல் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார். அதே பள்ளியில் வேப்பந்தட்டையை சேர்ந்த இன்ஜினியர் பாலமுருகன் மனைவி தீபா (42), கணித ஆசிரியையாக வேலை பார்த்து வந்தார். இந்நிலையில், வெங்கடேசனுக்கும், தீபாவுக்கும் தகாத உறவுடன், பணம் கொடுக்கல் வாங்கலும் இருந்து வந்ததாக தெரிகிறது.

வழக்கம் போல் கடந்த நவம்பர் 15ம் தேதி பள்ளிக்கு சென்ற இவர்கள் மாலையில் வீடு திரும்பவில்லை. தீபா மாற்றுத்திறனாளி என்பதால் தினமும் காரில் பள்ளிக்கு செல்வது வழக்கம். வீடு திரும்பாத கணவனை கண்டுபிடித்து தரும்படி ஆசிரியர் வெங்கடேசனின் மனைவி காயத்ரி கொடுத்த புகாரின் பேரில் பெரம்பலூர் எஸ்எஸ்ஐ பாண்டியனும், காணாமல் போன மனைவியை கண்டுபிடித்து தரும்படி கணவர் பாலமுருகனும் கொடுத்த புகாரின்பேரில் வி.களத்தூர் எஸ்ஐ ஜியாவுதீனும் தனித்தனியாக வழக்கு பதிவு செய்து விசாரித்து வந்தனர்.

இந்நிலையில், நவம்பர் 29ம் தேதி தீபாவின் கார் கோவையில் மீட்கப்பட்டது. அதில் தீபாவின் தாலி, செல்போன், ஏடிஎம் கார்டு கள், ரத்தக்கறை படிந்த சுத்தியல், அரிவாள் போன்ற ஆயுதங்கள் இருந்ததால் ஆசிரியை கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற கோணத்தில் போலீசார் விசாரணையை முடுக்கி விட்டனர். பெரம்பலூர் எஸ்பி ஷ்யாம்ளா தேவி உத்தரவின் பேரில் 5 தனிப்படையினர் ஆசிரியர் வெங்கடேசனை பல ஊர்களில் தேடிவந்தனர். கடந்த 85 நாட்களாக வெங்கடேசன் போலீசாருக்கு போக்குக் காட்டி வந்தார்.

இந்த வழக்கு தொடர்பாக சொந்த ஊருக்கு திரும்பவும் வந்துள்ள தகவலறிந்தும் ஆசிரியர் வெங்கடேசனை தப்பவிட்டதற்காக பெரம்பலூர் எஸ்எஸ்ஐ பாண்டியன், ஆசிரியை மாயமான வழக்கில் வழக்குப்பதிந்து விசாரணையை துரிதப்படுத்தாத காரணத்திற்காக வி.களத்தூர் எஸ்எஸ்ஐ முகமது ஜியாவுதீன் டிச.20ம்தேதி சஸ்பெண்ட் செய்யப்பட்டனர். குற்றவாளிக்கு உதவியதாக ஆசிரியர் வெங்கடேசனின் மனைவி காயத்ரி, மைத்துனர் பிரபு, உறவினர் ராஜா ஆகிய 3 பேரும் கடந்த டிச.29ம் தேதி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்நிலையில் இந்த வழக்கு தொடர்பாக திருச்சி மத்திய மண்டல ஐஜி கார்த்திகேயன், டிஐஜி மனோகர் ஆகியோர் உத்தரவின் பேரில் பெரம்பலூர் எஸ்பி ஷ்யாம்ளாதேவி, க்ரைம் டீம் எஸ்ஐ மனோஜ் தலைமையில் மங்களமேடு எஸ்ஐ செந்தமிழ்செல்வி, வி.களத்தூர் எஸ்எஸ்ஐ சஞ்சீவ்குமார், ஏட்டு சுரேஷ், காவலர் கலைமணி அடங்கிய சிறப்பு தனிப்படையை அமைத்தார். இந்த தனிப்படை போலீசாரின் தேடுதல் யுக்தியை அறிந்து கொண்ட ஆசிரியர் வெங்கடேசன், 2 நாட்களுக்கு மேல் ஓரிடத்தில் தங்காமல் தொடர்ச்சியாக இடத்தை மாற்றிக்கொண்டு தலைமறைவாகவும், அதேநேரத்தில் உல்லாசமாகவும் இருந்தபடி ஊரை சுற்றிவந்துள்ளார்.

இதையடுத்து அவரை பின்தொடர்ந்து சென்ற தனிப்படை போலீசார், ஆசிரியர் வெங்கடேசனை பெரம்பலூருக்கு அழைத்து வந்தனர். பின்னர் ரகசிய இடத்தில் வைத்து அவரிடம் விடிய விடிய விசாரணை நடத்தினர்.

அப்போது அவரிடம் இருந்து பகீர் தகவல்கள் வெளியானது. அதில், ஆசிரியர் வெங்கடேசன், ஆன்லைன் வர்த்தகத்தில் பல லட்சம் பணத்தை இழந்ததுடன் தீபாவிடமும் லட்சக்கணக்கில் அவ்வப்போது பணம் பெற்றுள்ளார்.

கொடுத்த பணத்தை கேட்டு தீபா தொந்தரவு செய்ததால் அவரை காரில் அழைத்து சென்று கொலை செய்து அவரது சடலத்தை எரித்து விட்டதாக கூறியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

போலீசுக்கு போக்கு காட்டும் ஆசிரியர்

ஆசிரியை கொலை தொடர்பாக பெரம்பலூர் மாவட்ட எஸ்பி ஷ்யாம்ளாதேவி கூறுகையில், "தனிப்படை போலீசாரிடம் பிடிபட்ட வெங்கடேசனை, புதுக்கோட்டைக்கு அழைத்து சென்று அங்கு ஆசிரியை தீபாவை எரித்தாரா அல்லது புதைத்தாரா என்பதை கண்டறிய வெங்கடேசன் அடையாளம் காட்டும் பணி நடந்து வருகிறது. ஆசிரியை மாயமாகி 3 மாதங்கள் நெருங்கி விட்ட நிலையில் சம்பவ இடத்தை நினைவு படுத்த முடியாமல் அங்கும் போலீசாருக்கு வெங்கடேசன் போக்கு காட்டி வருகிறார். இடம் உறுதி செய்யப்பட்ட பின்னர் வெங்கடேசன் அளிக்கும் வாக்கு மூலமே இந்த வழக்கை முடித்து வைக்கும்" என்றார்.

▶ தீபா

▶ வெங்கடேசன்

ஒவ்வொரு ஊராக உலா

மாயமான ஆசிரியை தீபாவின் நிலை என்ன என்பதே தெரியாத நிலையில் ஆசிரியர் வெங்கடேசன், தீபாவின் கணவர் பாலமுருகன், சிட்பண்ட்ஸ் நிறுவனத்தில் செலுத்துவதற்காக வழங்கிய பல லட்சக்கணக்கான ரொக்க பணம் மற்றும் ஆசிரியை தீபா அணிந்திருந்த லட்சக்கணக்கான மதிப்புள்ள நகைகளோடு தலைமறைவாக இருந்ததாலும், மனைவி, உறவினர் உள்ளிட்ட எல்லோரிடமும் செல்போன் தொடர்பே இல்லாதிருந்ததாலும் எளிதில் கண்டுபிடிக்க முடியாததால், பெரம்பலூர் மாவட்ட போலீசாருக்கு மாதக்கணக்கில் போக்குக் காட்டி சென்னை, மதுரை, கோவை, தேனி, திண்டுக்கல், கேரளா என ஒவ்வொரு ஊர்களில் உலா வந்துள்ளார்.

தடயங்களை சேகரிக்க தனிப்படை புதுகை விரைவு

பிடிபட்ட ஆசிரியர் வெங்கடேசன், மாயமான நவம்பர் 15ம்தேதியே பெரம்பலூர் மாவட்டம் முருக்கன்குடி வனப்பகுதியில் வைத்து ஆசிரியை தீபாவை கொன்று, சடலத்தை இரவோடு இரவாக புதுக்கோட்டைக்கு கொண்டு சென்று அங்கு ஆள் நடமாட்டம் இல்லாத ஒரு பகுதியில் போட்டு எரித்து விட்டதாக தனிப்படை போலீசாரிடம் தெரிவித்ததாக கூறப்படுகிறது. இதனையடுத்து தனிப்படை போலீசார், பெரம்பலூர் எஸ்பியிடம் அனுமதி பெற்று புதுக்கோட்டை மாவட்டத்தில் தீபாவின் சடலத்தை எரித்ததாக கூறப்படும் அந்த இடத்தை அடையாளம் காட்டுவதற்காக வெங்கடேசனை நேற்று காலை அழைத்து சென்றனர். ஆசிரியை தீபா கொல்லப்பட்டதற்கான தடயங்களை வழக்கிற்காக சேகரிக்க ஏதுவாக தடயவியல் நிபுணர்களும் விரைந்துள்ளனர்.

க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்
(முன்னதாக, பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்)
பதிவு பெற்ற அலுவலகம்: 602, 6 ஆவது தளம், ஸீரோ ஒன் ஐடி பார்க், எஸ்ஆர்.எண்.79/1, கோர்பாடி, முந்த்வா ரோடு, புனே-411036. கிளை அலகு: எண்.5, ஏ பிளாக், இரண்டாவது தளம், ஆர்ஜே பிளாசா, விருதம்பட்டு, காட்பாடி பிரதான சாலை, வேலூர்-632004.

மின்-ஏலம்-விற்பனை அறிவிப்பு
(சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடன்பட்ட அசையா சொத்து விற்பனை)

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்புச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 மேலும் கடனீட்புச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8&9 கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.

இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப–கடன்தாரர்கள்/ அமானதாரர்கள் / ஜாமின்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்புச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (முன்னதாக பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது. பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயர் க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று 17 நவம்பர் 2023 தேதியிலிருந்து மாற்றப்பட்டுள்ளது (முன்னதாக மக்ம ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற அறிவிப்பட்ட முதலில் ஜீ மனி ஹவுசிங் பைனான்ஸ் பப்ளிக் லிமிடெட் கம்பெனி என்ற பெயருடைய நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது) (இதற்குப் பிறகு கடனீட்டு கடனீந்தோர் என்று சட்டத்தின்படி குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்புச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி கவாதீனம் செய்துள்ளார். கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் 28.12.2023 தேதியன்று மின்–ஏலம் மூலமாக விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்– ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்க்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்–ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் நிலுவைத் தொகை (B)	சுவாதீனத் தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை (நிர்ணய விலையில் 10%) (F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்து பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலம் விடும் தேதி மற்றும் நேரம் (J)	வெற்றி விலைஞர்கள்/ நிதியன்ற வழக்குகள் நிலுவை ஏதேனும் (K)
1.	கடன் எண்: HM/0111/H/17/100361 R.தீபா (கடன்தாரர்), C ராமதாஸ் (உப–கடன்தாரர்)	அறிவிப்பு தேதி: 26.05.2022 மொத்த நிலுவைத் தொகை: 26.05.2022 தேதியின் படி ரூ.4,85,569.67/– (ரூபாய் நான்கு லட்சத்து எண்பத்தைந்தாயிரத்து ஐந்நூற்று அறுபத்தேழு பைசா மட்டும் மற்றும் தொகை வெளுத்துப்படும் காலம் வரையிலான ஆண்டு 15.25% வட்டி வீதத்திலான வட்டி.	கையக	வேலூர் மாவட்டம், வேலூர் பதிவு மாவட்டம், ஆம்பூர் இணை சார் பதிவு மாவட்டம், ஆம்பூர் வட்டம், குமாரமங்கலம் கிராமம், பட்டா எண்.284 இன் படி. நத்தம் பகுதிய சர்வே எண்.44/22, புதிய சர்வே எண்.44/6 இல் அடங்கியுள்ள 1087 ச.அடி அல்லது 101 ச.மீட்டர் பரப்ப